


**Published & Edited by:**
The President on behalf of Kongu Nanbargal Sangam, Velli Vizha Illam, No. 34 Srinivasa Perumal Sannathi 1st Street, Royapettah, Chennai - 600014.
**Printed by:**
M.Shaik Dawood, Dawood Graphics,
No. 63, Muthu Mudali Street, Royapettah, Chennai - 600 014.




## நிர்வாகக்குழு உறுப்பினர்கள்

**தலைவர்**
**வீ.க.செல்வக்குமார்**
Chennal Mettex Lab Pvt. Ltd.
98410 78949

**செயலாளர்**
**M.அமராபதி**
Jairram Hi-Tech Products
94440 60885

**பொருளாளர்**
**C.கொங்குவேள்** Dharani Developers P.Ltd., (PGP Group)
98408 90034

**துணைத் தலைவர்கள்**
**R.சண்முகவேல்**
Sunbright Designers Pvt. Ltd.,
98410 22960

**V.P.வீரப்பன்**
Sengam Transport
94432 66610

**இணைச்செயலாளர்கள்**
**C.அரவிந்தன்**
K Labs Technology & Solutions Pvt. Ltd.,
98419 23808

**P.ரவி**
SKV Educational Institution's
9842754245

## செயற்குழு உறுப்பினர்கள்

**அருள் பொன்னுசாமி**
Ponmani Engineers Pvt. Ltd.,
9884022266

**V.R.பாலசுப்பிரமணியன்**
Advocate & Labour Law Consultant
94444 04593

**S.அன்பழகன்**
BISMARCK Business Network Advisor (India, UAE, Hong Kong)
98403 09394

**K.ஜெகதீசன்**
Unitech Gorup
91767 17131

**S.சீனிவாசன்**
Prim Drugs & Pharmaceuticals I.Pvt., Ltd.,
94440 18021

**N.P.இசையழகன்**
Ms. Esal & Co. Chartered Acou
94444 04595

**R.கந்தகார்த்திக்**
RKG & Sons Associates
90036 90695

**கதிர்வேல் கணபதியப்பன்**
ISSM Business School
98840 22255

**K.G.ஜோதீஷ்குமார்**
Athiappa Chemicals (P). Ltd.,
9442488000

**A.நடராஜன்**
NU-Tech Components
9789973123

**K.ஜெகன் நாதன்**
Sri Krishna Power Loom Society
94437 42696

**K.நித்தியானந்தன்**
Sri Devkrish Group
98422 29503

**விசா M.சன்முகம்**
Sri Ambika Nets
9944933311

**S.குணசேகர்**
BRT Spinner Pvt. Ltd.,
9366635141

**T.P.நடராஜன்**
V.M.D. Groups, Chithode
9842766789

**D.மாணிக்கவாசகம் சிவப்பிரகாசம்**
RAWS N-Greens Health Care (P). Ltd.,
9443745879

**பரமேஸ்வரி சின்னசாமி**
P&C Projects (P) Ltd.,
9444070033

**Dr.சண்முகப்பிரியா MBBS**
AGS Complex & Ware Houses,
7824880456


பதிப்பாளர்
கொங்கு நண்பர்கள் சங்கம்,
வெள்ளி விழா இல்லம்,
எண். 34 ஸ்ரீநிவாச பெருமாள் சன்னதி 1-வது தெரு,
ராயப்பேட்டை, சென்னை - 600014.

ஆசிரியர் குறிப்பு
வாசகர்களிடமிருந்து கதை / கவிதை / கட்டுரை / சென்னை கொங்கு நண்பர்கள் மலர் பற்றிய விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒரு வாய்ப்பு. கட்டுரை இன முன்னேற்றத்திற்கும், மேம்பாட்டிற்கும் உதவும் வகையில் இருந்தால் சாலச் சிறந்தது. வரும் கதை, கட்டுரை முதலியவற்றை வெளியிடுவதோ அல்லது சுருக்குவதோ ஆசிரியருக்கு முழு உரிமை. நேர்காணல்களும், சிறப்புக் கட்டுரையாளரின் கருத்துகளும் அவரவர்களின் சொந்தக் கருத்துகளே.

# தலைவர் மடல்

அன்புடையீர் வணக்கம் நலம் நலம் பல விழைகிறேன்.

கடந்த செப்டம்பர் அக்டோபர் மாதங்கள் விநாயகர் சதுர்த்தி, ஆயுத பூசை, கலைமகள் பூசை, தீப ஒளித் திருநாள் என வரிசையாக விழாக் கோலமாக இருந்தது. தங்கள் இல்லங்களில் திருவிழாக்களை இனிதே கொண்டாடி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். மேலும் இந்த ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் திருமணங்கள், குடும்ப விழாக்கள், குடமுழுக்கு விழாக்கள் என எல்லாம் நடந்தேறிக் கொண்டிருக்கின்றன.

குன்றுதோறும் குடியிருக்கும் குமரனுக்கு கந்த சஷ்டி திருவிழாக்கள் வெகு விமர்சையாக நடந்தன. அதிலும் குறிப்பாக கொங்கு நாட்டில் பலரும் கந்த சஷ்டி விரதங்கள் இருந்து கொண்டாடும் நிகழ்வு வெகு சிறப்பாக நடந்தது.

முத்தமிழ்க் கடவுள் முருகனை நம் மக்கள் உள்ளன்போடு துதிக்கும் அதேவேளையில், முருகனைப் பற்றி பத்மபூஷன் ம.ப. பெரியசாமி தூரன் அவர்கள் இயற்றிய அருமையான பாடல்களையும், கொடுமுடி கோகிலம் பத்மஸ்ரீ கே.பி. சுந்தராம்பாள் அவர்கள் பாடிய அற்புதமான பாடல்களையும் கேட்டு இன்புறுவதை வழக்கமாக்கிக் கொள்வோம்.வாழ்க்கை என்னும் ஓடத்தில் பயணிக்கும் நம்மை விழாமல் பார்த்துக் கொள்வது விழாக்கள் தான் என்று நான் நினைக்கின்றேன். விழாக்களை மகிழ்ச்சியோடு கொண்டாடும் ஒவ்வொரு தருணத்தையும் அளவோடு துய்ப்போம். களிப்பின் மிகுதியினாலும், சோம்பலின் மிகுதியினாலும், கடமைகளை செய்யாது சோர்ந்து விடுதல், மறதி பணிகளைக் கெடுக்கும். நண்பரை இழக்கச் செய்யும். மறவாது நினைவில் கொள்ள வேண்டியவற்றைக் கொண்டு வாழ்தல் வாழ்க்கையை பயனுடையதாக்க உதவி செய்யும்.

**இறந்த வெகுளியின் தீதே சிறந்த**
**உவகை மகிழ்ச்சியின் சோர்வு**

– (குறள் : 531)

எல்லை மீறிய கோபம் ஒருவனுக்கு வருவதையும் விட கொடுமையானது எல்லை மீறிய மகிழ்ச்சியினால் உவந்து அதனால் சோர்வு வருவதாகும் என்கிறார் வள்ளுவர்.

கடந்த செப்டம்பர் மாதம் நமது சங்கத்தின் பொதுக்குழு கூடியது பொதுக்குழுவில் கலந்து கொண்டு சமுதாயக் கடமையாற்றிய உறுப்பினர்களுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை தங்களின் மேலான பார்வைக்காக இந்த இதழில் வெளியிட்டு இருக்கிறோம்.

குறிப்பாக சென்னை வாழ் மக்கள் அதிகம் பேர் உறுப்பினர்களாக சேர வேண்டும் என்பதற்காக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்களைச் சார்ந்த கொங்கு

இன மக்கள், குறிப்பாக இளைஞர்கள் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக

சேர ஆர்வம் காட்ட வேண்டும் என்றும், அதற்கு சங்க உறுப்பினர்கள் உறுதுணையாக

இருந்து ஆவன செய்ய வேண்டுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

இம்மாத இதழிலிருந்து புதிய முயற்சியாக நமது இனத்தைச் சார்ந்த கல்வியாளர்கள் தொழில் முனைவோர்கள் முன்னோடிகள் என மாதம் ஒருவரைப் பற்றி கட்டுரை வரைய உள்ளோம். வளரும் தலைமுறைக்கு வழிகாட்டியாகவும் தன்னம்பிக்கை ஊட்டுவதாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.
அவ்வகையில், கல்வியில் பெரும் சாதனை படைத்துள்ள சவீதா டாக்டர் வீரையன் அவர்கள் இம்மாத இதழை அலங்கரிக்கிறார்.



அதேபோல நூற்றாண்டு கண்ட நாயகர் வாழும் வரலாறு முனைவர் குழந்தைவேல் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டத்தை பற்றிய செய்தியும் இவ்விதழில் வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

கூட்டுறவு பால்வளத் தந்தை திரு.எஸ். கே. பரமசிவம் ஐயா அவர்களுக்கு ஈரோடு ஆவின் வளாகத்தில் சிலை நிறுவும் தமிழ்நாடு அரசினை மனதாரப் பாராட்டுவோம்!

நன்றி!

**வீ.க.செல்வக்குமார்**
**தலைவர்**



# கொங்கு நண்பர்கள் சங்கம்
## சென்னை
(பதிவு எண் : 282/76)



## கொங்கு மகளிர் விடுதி



Sharing Room | Double Cot
CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Dispenser
Washing Machine | Two Wheeler Parking

"கொங்கு நாடு இல்லம்"
27, அம்மையப்பன் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046, Cell : 63839 85919**

## தங்கும் விடுதி




"திரன் சின்னமலை மாளிகை"
நெ,72, பீட்டர்ஸ் ரோடு
இராயப்பேட்டை,
சென்னை-600 014.
**chennaikongu@gmail.com**
**Ph : 044 - 4266 8046**
**Cell : 93815 45451**

AC Rooms | Double Cot
TV | CCTV | Wifi | Safety Secure
Bathroom Heater | Water Bottle
Towel | Water Dispenser

**Discount for Members**

## கொங்கு மாணவர் விடுதி




AC Rooms Available
Double Cot
CCTV | Wifi
Safety Secure
Bathroom Heater
Water Dispenser
Washing Machine
Two Wheeler Parking

"வெள்ளி விழா இல்லம்"
34, சீனிவாசப் பெருமாள்
சன்னதி முதல் தெரு,
இராயப்பேட்டை, சென்னை - 14.
**chennaikongu@gmail.com**
**044 - 4351 0460 | Cell : 63839 85919**

# செயலாளர் கடிதம்

கொங்கு சொந்தங்களுக்கு வணக்கம்!!

ஒயில் கும்மியில் வள்ளி முருகன் கதை பாடலாகப் பாடப்படும் வள்ளி கும்மியைப் பல்வேறு ஊர்களில் பிரபலப்படுத்திய கொங்குமாமணி திரு.கே.கே.சி பாலு அவர்களுக்கு தமிழக அரசின் கலைமாமணி விருது வழங்கப்பட்டுள்ளது.

மேற்கத்திய கலாச்சாரம் மலிந்து வரும் இச்சூழலில் நமது கொங்கு மண்டலத்தின் பாரம்பரிய இசை நடனமான வள்ளிக்கும்மியை இத்தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி வரும் இவரது சேவை போற்றத்தக்கது. திரு.கே.கே.சி.பாலு அவர்களுக்கு நமது சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!!

மூத்த தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் பிறந்தநாளான 24/9/25 அன்று சங்கத்தின் வெள்ளிவிழா இல்லத்தில் ஐயா அவர்களது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது. செப்டம்பர் 28 அன்று நடைபெற்ற சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் பெருந்திரளான உறுப்பினர்கள் பங்கேற்று தங்கள் கருத்துகளைத் தெரிவித்தனர். குடும்பவிழாவில் அறிவித்தது போல் சங்கத்தின் வங்கிக்கணக்கில் ரூபாய் 10 இலட்சம் வைப்புத் தொகையாக (Fixed Deposit) செலுத்தப்பட்டது என்கின்ற மகிழ்வான செய்தியை உங்களோடு பகிர்ந்து கொள்கிறேன் !!

பல்வேறு வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட சங்கத்தின் கொங்கு நாடு இல்லம்,வெள்ளி விழா இல்லங்களின் தங்கும் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு சொந்தங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்!!



பல்வேறு போட்டித்தேர்வுகளுக்குத் தயாராகும் நமது மாணவர்களுக்கு உகந்த சூழலை நமது விடுதிகள் நல்கி வருவது நாம் அறிந்ததே...அதே போல் டீலக்ஸ் அறை உள்ளிட்ட வசதிகளைக் கொண்ட தீரன் சின்னமலை மாளிகை அறைகளையும் சென்னை வரும் நமது சொந்தங்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி! வணக்கம்!!

நன்றி வணக்கம்

**எம்.அமராபதி**

செயலாளர்


SUN-X CONCRETE
SUN-X CONCRETE INDIA PVT LTD
CHENNAI
OUR PRODUCTS
READY MIX CONCRETE | SOLID BLOCKS | AAC BLOCKS
AGGREGATE | FLYASH BRICKS
"Ramaniyam Ocean Isha", No11, 6th Floor, Old Mahabalipuram Road,Okkiyam Thoraipakkam,
Chennai - 600 096.
Call : 9003070704 | 9940400050
Email : sales@sunxconcrete.org
www.sunxconcrete.org

# உறவு

கண்ணிலே கண்டேன் உணர்வை
கண்ணாலே கண்டேன்  உயர்வை
மழை சாரலில்  உன் முகத்தில்
வியர்வை
துணி  வைத்து மறைந்தாய் அதனை
உணர்வால்
தாய் சேய் உறவு
அதிலே குருதிக்கும் உண்டு நிறைவு
தந்தை மகன் உறவு
கட்டி எழுப்பும் பல உயர்வு
அண்ணன் தம்பி உறவு அதில் வந்தது
சிறுசிறு பிளவு
அக்கா தங்கை உறவு என்றும் தொப்புள்
கொடி கயிறு
ஆத்தா அம்மணி உறவு ஆயிரம்
அர்த்தங்களின் நகர்வு
குரு சீடர் உறவு
ஆன்ம வாழ்வின் உயர்வு
அதிலே அத்தனை மன நிறைவு
மூத்தவர் இளையவர் உறவு
உயரும் இளையவர் அறிவு
மருத்துவர் நோயர் உறவு
உயரும் மருத்துவர் செல்வப்பொழிவு
உயரும் நோயர் தேக நிகழ்வு



கவிதை ஆக்கம் :
திரு.யக்ஞமூர்த்தி

# நினைவேந்தல்




தமிழறிஞர் சிலம்பொலி சு.செல்லப்பன் அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 24 அன்று சங்கத்தின் வெள்ளி விழா இல்லத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், இல்லத்தில் தங்கியுள்ள உறவுகள் மலர் தூவி மரியாதை செலுத்திய காட்சி!



கொங்குநாடு அறக்கட்டளையின் நிறுவனர் அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் ஐயா அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டும், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தினத்தை நினைவு கூர்ந்தும், அவர்களது திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தும் அறக்கட்டளை அறங்காவலர்கள்!



தமிழறிஞர் பத்மபூஷன் ம.ப.பெரியசாமி தூரன் அவர்களின் பிறந்தநாளான செப்டம்பர் 26 அன்று சங்கத்தில் அவரது திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

# வருந்துகிறோம்...



சங்க உறுப்பினரும், பி ஏ புட்வேர் நிர்வாக இயக்குனரும், கிட்கோ ஆலோசகருமான திரு. அன்புமலர் அவர்களின் தாயாரும், அறச்சலூர் கூத்தம்பட்டி தெய்வத்திரு சின்னசாமி கவுண்டர் அவர்களின் மனைவியுமான திருமதி **நளினி சுந்தரி** அவர்கள் 09-10-25 அன்று சென்னை அண்ணா நகரில் உள்ள இல்லத்தில் சிவனடி சேர்ந்தார்கள் என வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம் .



நாமக்கல் மாவட்ட காங்கிரஸ் விவசாயின் தலைவரும், கொங்கு நண்பர்கள் சங்கம் சென்னை சங்கத்தின் உறுப்பினருமான R. **மெய்ஞானமூர்த்தி** அவர்கள் கடந்த மாதம் இயற்கை எய்தினார். சங்கத்தின் சார்பாக அன்னார் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.


ஐரோப்பா - 9 நாடுகள் 15 நாட்கள்
ஆன்மீக இலங்கை - 8 நாட்கள்
திருக்கயிலாயம் - மானஸரோவர்
ரோடில் 13 நாட்கள் / ஹெலிகாப்டரில் 10 நாட்கள்
VIP யாத்திரை காசி, கயா, அலகாபாத், அயோத்தி, நைமிசாரண்யம் 7 நாட்கள்
Our Services
Pilgrimage Yathras | Corporate Tours | Adventure Trips | Educational Tours
Fit & Group Tours | Honeymoon Packages | Resorts Booking | Air Tickets
Cruises Booking | Passports, Visa | Travel Insurance | Money Exchange
தாங்கள் ஒரு குழுவாக இருந்தால் விரும்பும் தேதியில் விரும்பும் சுற்றுலாக்கள் நடத்தித் தருகின்றோம்.
அனைத்து உள்நாடு, வெளிநாடு சுற்றுலாக்களுக்கு அணுகவும்
மனோகர் டிராவல்ஸ் & டூர்ஸ் பிரைவேட் லிமிடெட்
31, பாவாடை வீதி, ஈரோடு - 638001.
www.manohartravels.com | e-mail : manohartravvels@gmail.com
செல் : 94433 80159, 96881 81383

நிச்சயதார்த்தம், திருமணம், எழுதிங்கள்சீர், அரசுவேம்பு திருமணம் ஆகிய சீர்களுக்கும், இசையுடன் கலாச்சார சொற்பொழிவுக்கும், முழு மங்கல வாழ்த்து சொல்லுதலுக்கும், சக்கரகத்தி, பண்டாரம், ஏகாளி, (கட்டுகண்ணிகள்) தேவைக்கும் அணுகவும்
ஈரோடு அருமைக்காரர், கயிலைச்சித்தர்
தூரன்
V.மனோகரக்கவுண்டர்
மனோகர் டிராவல்ஸ், ஈரோடு - 638001.
அருமைச்சீர் திருமணத்திற்கும், எழுதிங்கள்சீருக்கும் தேவையான அனைத்து பொருட்களையும் உங்கள் இடத்திற்கே கொண்டு வந்து நியாயமான கட்டணத்தில் திருமணச்சீர், எழுதிங்கள்சீர் செய்து வைக்கின்றோம்.
செல் : 94433 80159, 96881 81383

கவிதை...

# தீபாவளிப் பூக்கள் நீங்கள்!

நாம் பார்த்திருக் கின்றோம்
இருண்ட்டு விரிந்த வான வெளியினை
நாம் வானம் விட்டிருக்கின்றோம்
அதன் கீழே மத்தாப்பு வெளிச்சம்
நாம் வளைந்து நெளிந்து குதித்திருக்கின்றோம்
அந்த வான்வெளிப் பூக்களைப் பார்த்து
நாம் சிறார்களாக இருந்ததால் தானே
இந்தச் சிந்தனை மனதில் உண்டாயிற்று

அந்தரத்தில் நிற்கும் நட்சத்திரங்கள்
அவை மானுடத்திற்குக் கதை சொல்லும்
இந்தவானம் ஒன்றும் புதிதன்று
இதைக் கடந்தும் மேல்வானம் உண்டு
சிந்தனைச் செல்வங்களே நீங்கள் பூக்கள்!
அதைச் சொந்தமாக்கிய உதட்டுச் சிரிப்பு
வந்தனை செய்கின்றோம் வான்வெளியை
அதற்கு வா என எண்ணப் பூக்கள் சொல்லும்

மத்தாப்புப் பூக்கும் பூக்கள் ஒன்று
மனிதன் பூக்கும் பூக்கள் வேறு
நித்தமும் வளைந்து தெளிந்து ஆடும்
கனி பழுத்திடப் பூக்கும் பூக்கள்
மொத்தமாய் நீங்கள் இரசிக்கும் பூக்கள்
முழுவதும் பண்டிகை நேசப் பூக்கள்
அத்தனையுமம் எங்கள் நாட்டுப் பூக்கள்
ஆடி அவை ஓடும் பூக்கள் வாழி!
(மனிதன் பூக்கும் பூ – சிரிப்பு)



அ.பாலசுப்ரமணியன், ஈரோடு

# தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பன்
# 96 வது பிறந்த நாள் விழா



**சிலப்பதிகார அறக்கட்டளை விருதுகள் வழங்கும் விழா**









அன்புரை

வளரும் வரலாற்றின் ஒரு கிளையாக...

சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வாழ்கிற பேறு வாய்க்கப்பெற்றவர்களுக்கு அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களையும், அருட்செல்வர் பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அவர்களையும் நன்கு தெரிந்திருக்கும்.




தமக்கு வைத்த பெயர்களை விடவும் தமக்கு வாய்த்த நற்பெயர்களுடன், வாழும் ஊர்களின் பெயர்களை முன்னிறுத்திச் செய்த சாதனை களை உலகம் அறியும். தமக்குப் பின்னும் அத்தரும நெறி விளங்க முறை செய்தவர்கள் இவர்கள்.

அடிகளார் தம் அருளரசாக நமக்குவிடுத்துச் சென்ற ஆன்மிக நாயகர் தவத்திரு பொன்னம்பல அடிகள் பெருமானுக்கு, அருட்செல்வரின் தவப்புதல்வர் மகாலிங்க மாணிக்க அண்ணல் எடுக்கும் மணிவிழா, சென்னை இராமலிங்கர் பணிமன்றப் பெருவிழாவில் ஒரு திருநாளாய் மலர்கிறது.

இந்த விழாவில், 'நூற்றாண்டு கண்ட ஆளுமைகள் அடிகளாரும் அருட்செல்வரும்' என்ற குறுந்தொகுப்பினை வெளியிட இவர்கள் இசைந்ததன் விளைவு, இந்நூல்,

# வாழ்த்துகிறோம்




KPR மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் திரு கே பி ராமசாமி அவர்கள், 2025 -ஆம் ஆண்டுக்கான Forbes India's 100 Richest List -இல் 97 -வது இடத்தை பெற்றுள்ளமைக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறோம்.

# வாழ்த்துகிறோம்




02.10.2025-ல் சென்னை, கிண்டியில் கவர்னர் மாளிகை அருகில் உள்ள காந்தி மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் நமது சங்கத்தின் உறுப்பினர் சிதம்பரம் (நாமக்கல்) அவர்களுக்கு விருது வழங்கி கௌரவித்து பாராட்டியுள்ளார்.

மகாத்மா காந்தியின் போதனைகள், மதிப்புகள், லட்சியங்கள், அகிம்சை, உண்மை, சுய ஒழுக்கம், சேவை, ஒற்றுமை ஆகியவற்றை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு, செல்லும் வகையில் பணியாற்றி சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியதற்கு இவ்விருது வழங்கப்பட்டது.



தமிழக அரசு சார்பாக கலை மாமணி விருது பெற்ற திரு கே கே சி பாலு அவர்களை சங்கத்தின் சார்பாக செயலாளர் எம் அமராவதி மற்றும் செயற்குழு உறுப்பினர் எஸ் அன்பழகன் அவர்களும் சந்தித்து வாழ்த்து தெரிவித்த தருணம்



திருமுடிவாக்கம் சிட்கோ தொழிற்பேட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நமது செயற்குழு உறுப்பினர் திரு அருள் பொன்னுசாமி அவர்களை சங்கத்தின் சார்பாக வாழ்த்துகிறோம்

எழுதியவர்: பெ.தூரன்




09

# சங்ககிரிக் கோட்டையின் மர்மம்

“அடே அப்பா எவ்வளவு பெரிய கோட்டைக் கதவு” என்று சுந்தரம் ஆச்சரியத்தோடு கூவினான். “பெரிய பெரிய பாராங்கல்லையெல்லாம் வைத்து எப்படித்தான் இந்தச் சுவர்களைக் கட்டினார்களோ?” என்று கண்ணகி ஆச்சரியப்பட்டாள்.

“ஆங்கிலேயரை இந்த நாட்டிலிருந்து விரட்டி விடவேண்டும் என்று திப்புசுல்தான் கங்கணம் கட்டிக் கொண்டிருந்தான். அவனுடைய துணிச்சலுக்கும் வீரத்திற்கும் எல்லையே இல்லை. இருந்தாலும், அவனுடைய எண்ணம் நிறைவேறாமல் போய்விட்டது” என்று தங்கமணி விளக்கினான்.

வேகமாக மலையில் ஏறி மலையின் மத்திய பாகத்தில் உள்ள குகையை அடைந்தார்கள். ஜின்காவுக்கு மலைமேல் ஏறுவதில் தனிப்பட்ட உற்சாகம்.

சுந்தரம் குகைக்குள் சில அடி தூரம் நுழைந்து பார்க்க முயன்றான்.

“சுந்தரம், முதலில் மலை உச்சிக்குப் போவோம். அங்குள்ளவற்றையெல்லாம் பார்த்து விட்டுத் திரும்பி வரும் போது இந்தக் குகையை ஆராய்வோம்” என்றான் தங்கமணி.

அவன் சொன்னபடியே எல்லாரும் சங்ககிரியின் சிகரத்தை நோக்கி விரைந்தார்கள், அங்கிருந்து பார்த்தால் ஒரு பெரிய மலைச் சரிவு தென்பட்டது. அங்கே கொத்தளங்களை அமைத்து அவற்றில் பீரங்கியை வைத்து சுடுவதற்கு வேண்டிய வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

“மலைச் சரிவின் வழியாக விரோதிகள் மேலே வரக்கூடும். அப்படி வந்தால் பீரங்கியைப் பயன்படுத்தலாம் என்று முன் யோசனையோடு செய்திருக்கிறார்கள்” என்று தங்கமணி விளக்கம் தந்தான்.

“அப்பா! இந்த இரும்பு குண்டு எத்தனை கனம்” என்று கண்ணகி கூவினாள். ஜின்கா அதை இரண்டு கைகளாலும் தூக்கிப் பார்த்து விட்டு தொப்பென்று கீழே போட்டது.

“பீரங்கியை எப்படியடா சுடுவார்கள்?” என்று சுந்தரம் கேட்டான்.

“இவையெல்லாம் அந்தக் காலத்து பீரங்கிகள், இவற்றை வைத்துக் கொண்டுதான் ஆங்கிலேயர் இந்தியாவைக் கைப்பற்றினார்கள். திப்புசுல்தான் பிரெஞ்சுக்காரருடைய உதவியைக் கொண்டு பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் வரவழைத்துத் தனது வீரர்களை அதில் பயிற்சியும் கொடுத்திருந்தான். இருந்தாலும் அவனால் ஆங்கிலேயரை நாட்டை விட்டு வெளியேற்ற முடியவில்லை!”

என்றான் தங்கமணி.

அதற்குமேல் தானியக் கிடங்குகளைப் பார்வை யிட்டார்கள், ஒரு பக்கத்திலே கைதிகளை அடைத்து வைக்கும் இருட்டறை இருந்தது. உள்ளே செல்லுவதற்கு வேண்டிய வழி மேல் பாகத்தில் இருந்தது. அதை ஒரு பெரிய மரக்கதவால் மூடியிருந்தார்கள்.

மூன்று பேரும் மிகவும் சிரமப்பட்டு அதைத் தூக்கினார்கள். உள்ளே ஒரே இருட்டாக இருந்தது. அதற்கு மேல் அதைப் பார்க்க அவர்கள் விரும்பவில்லை.

தானியக் கிடங்கில் அரிசி, பருப்பு போன்ற உணவுக்கு வேண்டிய பொருள்களையோ அவற்றில் சேமித்து வைப்பதற்கு ஏற்றவாறு அவைகள் அமைந்திருந்தன.

“கோட்டையை முற்றுகையிட்டாலும் ஆறு மாதத்திற்கு உள்ளே உணவுப் பஞ்சம் ஏற்படாது” என்றான் தங்கமணி.

“அந்தக் காலத்தில் நாம் பிறந்திருக்க வேண்டும். அப்பொழுது நேராக எல்லாவற்றையும் பார்த்திருக்கலாம்” என்றான் சுந்தரம். “வேண்டவே வேண்டாம். சண்டையென்றால் எத்தனையோ பேர் சாவார்கள். நமக்குச் சமாதானம்தான் வேண்டும். அப்பொழுதுதான் நமது நாடு” என்று கண்ணகி கூறி முடிப்பதற்குள்,

“சரி, ஆரம்பித்து விட்டாயா உன் பிரசங்கத்தை? நான் ஏதோ தமாஷாகச் சொன்னால்....” என்று இழுத்தான் சுந்தரம்.

“உனக்கு எல்லாம் தமாஷ்தான் – வேறு என்ன தெரியும்?” என்று குத்தலாகப் பேசினாள் கண்ணகி.

“உனக்கு நகைச்சுவை உணர்வே இல்லை என்று தெரியும்” என்று நகைத்தான் சுந்தரம்.

தங்கமணி இவர்கள் பேசுவதைக் கவனிக்கவே இல்லை. அவன் துருதுருவென்று சுற்றிலும் ஆராய்வதிலேயே நாட்டமாக இருந்தான்.

பிறகு அவர்கள் உச்சியில் இருந்த ஒரு சுனையைப் பார்த்தார்கள். அதன் மேல் ஒரு பாறை சுனையின் முக்கால் பாகத்தை மூடுவதுபோலக் கவிந்திருந்தது. அதனால் சுனையில் உள்ள சுத்தமான நீர் குளிர்ச்சியாக இருந்தது. குடிப்பதற்கும் நன்றாக இருந்தது.

அந்த சுனைக்குப் பக்கத்தில் அமர்ந்து அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த உணவை அருந்தலானார்கள்.

“கண்ணுப் பாட்டி ரொம்ப ஜோர்; எல்லாம் நன்றாகத் தயார் செய்திருக்கிறாள்” என்றான் சுந்தரம். தங்கமணி உணவை வாயில் போட்டுக் கொண்டே ஏதோ ஆழ்ந்த யோசனையிலிருந்தான்.

“என்னடா, பெரிய யோசனை? கோட்டையைத்தான் பிடித்தாகி விட்டதே” என்று கேலி செய்தான் சுந்தரம். “கோட்டையைப் பார்த்து விட்டோம். ஆனால் புதையல் இருக்குமிடத்தை இன்னும் கண்டு பிடிக்க முயற்சி செய்யவில்லையே?” என்று தங்கமணி தனது யோசனையின் காரணத்தை விளக்கினான்.

“அதைத்தான் கோட்டை விட்டுவிட்டோம்” என்றான் சுந்தரம்.

“ஒரு வேளை புதையல் என்பதெல்லாம் வெறும் கற்பனையோ?” என்று சிந்தித்தான் தங்கமணி.

ஜின்கா வாயில் உணவைப் போட்டுக் கன்னத்தில் அடக்குவதும் பிறகு மெல்லுவதுமாக இருந்தது. அதற்கும் நல்ல பசி.

“காட்டு மாரியம்மன் கோவிலுக்குச் செல்லும் சுரங்க வழியில்தான் புதையல் இருக்க வேண்டும்” என்று கண்ணகி திடீரென்று சொன்னாள்.

“ஆகா இதோ ஒரு துப்பறியும் சாம்பு.–இல்லை சாம்பி. மிஸ் ஷெர்லக் ஹோம்ஸ்” என்று கூறி நகைத்தான் சுந்தரம்.

“ஆகா எத்தனை பெரிய ஜோக் அடித்து விட்டான், உனக்கு ஜோக் சுந்தரம் என்று பட்டம் கொடுக்கலாம்” என்று கண்ணகி சளைக்காமல் பதில் அம்பு தொடுத்தாள்.

“எதற்கும் சீக்கிரமாக அந்தக் குகையைப் போய்ப் பார்த்து விடுவோம். ஒரு வேளை கண்ணகி சொன்னதே உண்மையாக இருக்கலாம்” என்று தங்கமணி கூறிவிட்டுக் காலியான இலைகளையெல்லாம் சுருட்டி, ஒரு பக்கத்தில் வீசினான்.



# வரும் நிகழ்வுகள்




**கொங்கு சமுதாய எழுதிகங்கள் இணைச்சீர் விழா**

மாசி 21- ம் தேதி 05.03.2026 வியாழக்கிழமை

**ஸ்ரீ அரசு வேம்பு திருமண விழா**

மாசி 22- ம் தேதி 06.03.2026
வெள்ளிக்கிழமை

இடம்:
பலாமரத்துக் காடு, மும்முடி, தலைவாசல் வட்டம்,
சேலம் மாவட்டம்



இந்தியாவின் வெண்மை புரட்சி நாயகன் திரு.குரியன் அவர்களுடன் நமது எஸ் கே பரமசிவம் ஐயா அவர்கள்!
**திரு எஸ். கே.பி.அவர்களின் திருவுருவச்சிலை வரும் நவம்பர் 26 ஆம் தேதி ஈரோடு, சித்தோடு** ஆவின் வளாகத்தில் தமிழ்நாடு முதலமைச்சரால் திறக்கப்பட உள்ளது.




## நிகழ்ச்சி நிரல்

வருகின்ற டிசம்பர்

**26, 27,28 - 2025**

**வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமை** அன்று தாராபுரம் ரோடு, திருப்பூரில் உள்ள **ஸ்ரீ வேலாயுத சுவாமி திருமண மண்டபத்தில்** நடைபெறவுள்ளது





இராமநாதபுரம் பசும்பொன்னில் நடைபெற உள்ள தேவர் ஜெயந்தி விழாவில் கலந்து கொள்ள மதுரைக்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் மதுரை சுற்றுலா மாளிகையில் மேதகு துணை ஜனாதிபதி சிபி ராதாகிருஷ்ணன் அவர்களை சந்தித்து வாழ்த்தியபோது.





ஆழ்வார்குறிச்சி அருகில் உள்ள சிவசைலம் வாமா அறக்கட்டளையின் சார்பில் நடைபெற்ற முதியோர் நல மருத்துவ முகாமில் நமது முதியோர் நல மருத்துவர் டாக்டர். வி.எஸ். நடராஜன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். மேலும், அந்நிகழ்வில் நடனமாடிய செல்வி. கோசிகா, செல்வி. சக்திகா ஆகியோருக்கு பூச்செண்டு கொடுத்து பாராட்டினார்கள்.

# வான்மழை பற்றிய கருத்தரங்கம்

**வனம் இந்தியா நடத்திய கருத்தரங்கத்தில் கருத்தரங்க விழாவின் காட்சிகள்**












# விழித்தெழு! முயன்றிடு!! வென்றிடு

## 01 விழிப்புணர்வே திறவுகோல்



- சிந்தனை கவிஞர் டாக்டர் கவிதாசன்
இயக்குனர் மற்றும் தலைவர் மனிதவள மேம்பாட்டு துறை
ரூட்ஸ் நிறுவனங்கள் கணபதி கோவை

"விழித்துக் கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார்;வீனில் குறட்டை விட்டோர்;எல்லாம் கோட்டை விட்டார்" என்கிறது திரை இசை பாடல் ஒன்று விழித்தல் என்பது கண் விழிப்பதை மட்டும் குறிக்கவில்லை விழிப்புணர்வு கொள்வதையும் குறிக்கிறது

**"விழுமின்! எழுமின்! குறிக்கோளை அடையும் வரை ஓயாது உழைமின்"** என்றார் சுவாமி விவேகானந்தர் **பசித்திரு தனித்திரு விழித்திரு** என்றார் வள்ளல் பெருமான். ஆம்! விழிப்புணர்வே வெற்றிக்கு திறவுகோல் சிறிய விதைக்குள் மாபெரும் விருச்சம் உறங்கிக் கொண்டிருப்பதைப் போல, ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு சாதனை மனிதன் உறங்கிக் கொண்டிருக்கிறான்.

ஒவ்வொருவரும் தன்னைத் தானே உணர்ந்து கொள்வதன் மூலமாக ஆற்றல் பெருக்கி முயற்சியில் இறங்கி உழைக்கவும் முன்னேற்றக் காற்றை சுவாசிக்கவும் முடியும் தன்னை உணர்வதற்கு தனக்குள்ளாக ஒரு ஆய்வுப் பயணம் மேற்கொள்ள வேண்டும்.

அதாவது உங்களிடம் உள்ள பலம் (Strength) என்ன? என்பதையும் பலவீனம் (Weakness) என்ன ? என்பதையும் ஆய்ந்தறிய வேண்டும். பலம் என்பது ஒருவருடைய தனித் திறனை குறிக்கும். எவ்வாறு நீக்குதல் மீனுக்கு பலமாகவும்; பாடுவது குயிலுக்கு பலமாகவும்; அகல்வது மயிலுக்கு பலமாகவும் இருக்கிறதோ அதுபோல உங்களுடைய தனித்துவம் என்ன என்பதை கண்டறிந்து அவற்றை பட்டியலிடுங்கள். பிறகு தனித்திறனை பயன்படுத்துகிறீர்களா? இல்லை பயன்படுத்தவில்லையா? என்று சிந்தித்துப் பாருங்கள் திறமைகள் இருந்தும் பயன்படுத்தவில்லை என்றால் அதற்கான காரணங்களைப் பட்டியலிடுங்கள். உதாரணத்திற்கு, பயமும், தாழ்வு மனப்பான்மையும் உங்களுடைய முயற்சியை தடுக்கிறதா? அல்லது திறமைகளை காட்டுவதற்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லையா? அல்லது உங்களை உற்சாகப்படுத்தவும் உங்கள் ஊக்கப்படுத்துவதற்கும் யாரும் இல்லையா? ஆகவே, சுயத்திறன் ஆய்வின் மூலமாக உங்களை நீங்களே உணர தொடங்குங்கள்.

மனம் அமைதியாக இருக்கும் அதிகாலை பொழுதில் அகத்தாய்வில் ஈடுபடலாம். தன்னைத் தானே முழுமையாக உணர்ந்து கொள்ள இந்த அகத்தாய்வுப் பயிற்சி பயன்படும்!

சாதாரண வாழ்க்கையிலிருந்து சாதனை வாழ்க்கைக்குள் நுழைவதற்கு இந்த அகத்தாய்வு திறவுகோலாக அமையும். மேலும் ஒவ்வொரு நாளும் தியானத்தையும் அகத்தாய்வையும் செய்யும் போது மனம் தெளிவடைவதுடன், ஆழ்மன ஆற்றல் எல்லையின்றி பெருகத் தொடங்கும்.

மனமே வெற்றியின் திறவுகோல் ஆகவே மனதை அறிவதும்; அதனை செம்மைப்படுத்துவதும் வெற்றிக்கான முதல்படி! முயலுங்கள்! வெல்லுங்கள்.

**மற்றவர்களை வெல்பவன் வீரன்**
**தன்னைத்தானே வெல்பவன் மாவீரன்.**

– அடுத்த இதழில் சந்திப்போம்



ஒரு கனவு...

அதை நனவாக்கிய ஒரு மனிதர்.

## சவீதா நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் மற்றும் வேந்தர்

# டாக்டர் என். எம். வீரையன்

ஈரோடு மாவட்டத்தில் உள்ள நல்லிகவுண்டனூர் என்ற சிறிய ஊரிலிருந்து தொடங்கிய அவர், “கல்வியும், மருத்துவ சேவையும் சமூக மாற்றத்தின் வேராக இருக்க வேண்டும்” என்ற நம்பிக்கையுடன் இருந்தார். குறைந்த வசதிகளுடன் தொடங்கிய அவரது வாழ்க்கை, இன்று ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை வெளிச்சமிடும் பல்கலைக்கழகமாக மலர்ந்துள்ளது.

1988 ஆம் ஆண்டு தொடங்கிய சவீதா **பல் மருத்துவக் கல்லூரி,** ஒரு கல்வி நிலையமாக மட்டுமல்ல; “மனிதநேயம் நிறைந்த கற்றல் மையம்” ஆக மாறியது. அதிலிருந்து வளர்ந்து, இன்று மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம், நர்சிங், எனப் பல துறைகளில் விரிவடைந்து மாபெரும் பல்கலைக்கழகமாக மாறியுள்ளது. இது இந்தியாவை உலக கல்வி வரைபடத்தில் உயர்த்திய சிறப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாகும்.

**நிறுவனர் – முயற்சியின் முகம், உழைப்பின் உருவம்**

டாக்டர் வீரையன் அவர்களின் வாழ்க்கை ஒரு பாடம்.

“வாய்ப்புக்காக காத்திருப்பதற்குப் பதிலாக, நம்மால் ஒரு வாய்ப்பை உருவாக்கலாம்” — என்ற நம்பிக்கை அவரை முன்னோக்கி நகர்த்தியது.

அவர் எப்போதும் கூறுவார்: “வாழ்க்கையில் உழைப்புக்கே மரியாதை உண்டு; வாய்ப்புக்கல்ல.”

அந்த எண்ணமே இன்று சவீதா மாணவர்களின் மனப்பான்மையிலும் பதிந்திருக்கிறது. அவரின் வழிகாட்டுதலின் கீழ், **சவீதா பல் மருத்துவக் கல்லூரி** இந்தியாவில் நம்பர் 1 இடத்தைப் பிடித்துள்ளது.

அதேபோல், NIRF, QS World Rankings, மற்றும் Times Higher Education Rankings போன்ற பல சர்வதேச தரவரிசைகளில் சவீதா சிறப்பிடம் பெற்றுள்ளது.

### சமூகப் பொறுப்பு – கல்வி சேவை

டாக்டர் வீரையன் அவர்களுக்கு, ’கல்வி என்பது ஒரு வணிகம் அல்ல, அது ஒரு சமூகப் பணி.’ அதனால்தான் சவீதா பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான மருத்துவ முகாம்களை கிராமப்புறங்களில் நடத்துகிறது, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு திறன் பயிற்சி வழங்குகிறது. அவரது நம்பிக்கை எளிது: “ஒரு மாணவன் வெற்றி பெற்றால், ஒரு குடும்பம் உயரும்; ஒரு பல்கலைக்கழகம் உயர்ந்தால், ஒரு சமூகம் மாறும்.”

### சவீதா – அறிவும் ஆராய்ச்சியும் இணைந்த தளம்

இன்று சவீதா பல்கலைக்கழகம், இந்தியாவிலேயே ஆராய்ச்சி, புதுமை, மற்றும் சமூகப் பங்களிப்பிலும் முன்னணி வகிக்கிறது.

மாணவர்களும் பேராசிரியர்களும் சேர்ந்து வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகள், பெற்றிருக்கும் பேட்டன்ட்கள் (Patents), மற்றும் உலகளாவிய ஜர்னல்களில் வெளியான பங்களிப்புகள் சவீதாவை ஒரு உலகத் தரப் பல்கலைக்கழகமாக உருவாக்கியுள்ளன.

மருத்துவமனைகள் மற்றும் ஆய்வகங்கள் வழியாக தினமும் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்குச் சேவை செய்து வருகின்றன — “கற்றது செயலாக மாறும்” என்ற அடிப்படையை உண்மையாக்கியுள்ளது சவீதா பல்கலைக்கழகம்.

### எதிர்கால நோக்கம்

டாக்டர் வீரையன் அவர்களின் கனவு இதோடு முடிவடைவதில்லை.

அவரது அடுத்த இலக்கு — சவீதாவை உலகின் தலைசிறந்த முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றாக உருவாக்குவது. அதற்காக அவர் தொழில்நுட்பம், கற்றல் முறை, மற்றும் ஆராய்ச்சியில் புதுமைகளை ஊக்குவித்து வருகிறார்.

### சவீதா பல்கலைக்கழகம் – கல்வி, ஆராய்ச்சி, மனிதநேயம் ஒன்று சேரும் இடம்

சவீதா பல்கலைக்கழகம் இன்று கல்வியின் அர்த்தத்தை மாற்றியமைத்த நிறுவனமாக திகழ்கிறது. இங்கு மாணவர்களின் அறிவு மட்டுமின்றி, ஒழுக்கம், பொறுப்பு, பரிவு, புதுமை எண்ணம் மற்றும் சமூக உணர்வு ஆகியவை இங்கு வளர்க்கப்படுகின்றன.

### கல்வி முறையின் சிறப்புகள்

சவீதா பல்கலைக்கழகம் மாணவர்களின் தனித்திறன்களை வெளிப்படுத்தும் வகையில் கற்றல் முறைகளை மாற்றி அமைத்துள்ளது. புத்தகப் பாடங்களுடன் இணைந்து தொழில் திறன் பயிற்சி, ஆய்வக அனுபவம், சமூகப் பணிகள் ஆகியவை மாணவர்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பாடத்திட்டம் வாழ்க்கைத் தொடர்பு உள்ளபடி வடிவமைக்கப்பட்டுள்ளதால், இங்குள்ள மாணவர்கள் நிஜ வாழ்க்கைச் சூழலில் தங்களை நம்பிக்கையுடன் நிறுத்திக் கொள்ளக் கற்றுக் கொள்கிறார்கள்.

### ஆய்வுகள் மற்றும் கண்டுபிடிப்புகள்

சவீதா பல்கலைக்கழகம் மருத்துவம், பல்

மருத்துவம், தொழில்நுட்பம், சட்டம் போன்ற பல துறைகளில் ஆய்வுக் கூடங்களை உருவாக்கியுள்ளது. இங்கு மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து புதிய கண்டுபிடிப்புகளை செய்து வருகின்றனர். சமீப ஆண்டுகளில் சவீதா பல்கலைக்கழகம் பெற்றுள்ள தேசிய மற்றும் சர்வதேச காப்புரிமைகள் (பட்டங்கள்), வெளியிட்ட ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் பங்களிப்புகள் அதன் அறிவியல் வலிமையை வெளிப்படுத்துகின்றன.

### மாணவர்களின் மேம்பாடு

மாணவர்களின் கல்வி வளர்ச்சியோடு சேர்த்து, அவர்களின் நற்பண்பும் சமூக பொறுப்புணர்வும் வளர்க்கப்படுகின்றன. பள்ளியிலிருந்து பல்கலைக்கழக வாழ்க்கை வரை ஒருவரின் முழுமையான மனித உருவாக்கமே சவீதாவின் நோக்கம்.

“வெற்றி பெறுவது மட்டும் போதாது, நல்ல மனிதராக மாற வேண்டும்” என்பதே சவீதாவின் அடிப்படைச் செய்தி.

### தரச் சான்றுகள், அங்கீகாரங்கள் மற்றும் பெருமைகள்

சவீதா பல்கலைக்கழகம் தன் கல்வித் தரம், ஆய்வு திறன் மற்றும் சமூகப் பங்களிப்பின் மூலமாக பல்வேறு பாராட்டுகளையும் அங்கீகாரங்களையும் பெற்றுள்ளது. இந்திய அரசின் தேசிய அளவீட்டு அமைப்புகள் பலமுறை சவீதாவை முன்னணி கல்வி நிறுவனமாகத் தேர்வு செய்துள்ளன. முக்கியமாக பல் மருத்துவம், மருத்துவம் மற்றும் தொழில்நுட்பம் போன்ற துறைகளில் சவீதா மாணவர்கள் பல மாநிலங்களிலும் நாடு முழுவதும் முன்னணியில் விளங்குகிறார்கள்.

### உலகளாவிய அடையாளம்

சவீதா பல்கலைக்கழகத்தின் கல்வித் தரம் இன்று உலகளாவிய அளவிலும் மதிப்பு பெற்றுள்ளது. வெளிநாடுகளில் உள்ள பல கல்வி நிறுவனங்களுடன் சவீதா இணைந்து செயல்படுகிறது. மாணவர் பரிமாற்ற திட்டங்கள், ஆராய்ச்சி கூட்டமைப்புகள் மற்றும் கலாச்சாரப் பரிமாற்றங்கள் மூலமாக உலகம் முழுவதும் சவீதாவின் பெயர் பிரபலமடைந்துள்ளது.

### சுகாதார சேவை மற்றும் சமூகப் பணி

சவீதா மருத்துவமனை மற்றும் அதன் இணை மருத்துவ மையங்கள் நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிகிச்சை வழங்குகின்றன. இதன் மூலம் மருத்துவம் மற்றும் கல்வி ஒரே சமயத்தில் மக்களுக்காக செயல்படுகிறது.

### மாற்றத்தின் பாதையில் சவீதா – கல்வி, புதுமை, மனிதம்

சவீதா பல்கலைக்கழகம் இன்று ஒரு கல்வி நிலையமாக மட்டுமல்ல; அது ஒரு “மாற்றத்தின் இயக்கம்” ஆக திகழ்கிறது. பழைய கற்றல் முறைகளை தாண்டி, புதிய சிந்தனை, தொழில்நுட்பம், மற்றும் மனிதநேயம் ஒன்றிணைந்த கல்வியை உருவாக்கி வருகிறது.

இங்குள்ள ஒவ்வொரு மாணவரும் ஒரு அறிவு விதை — அந்த விதை சமூகத்தில் மாற்றத்தை மலரச் செய்யும் என்பதே சவீதாவின் நம்பிக்கை. மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாமல், கலை, விளையாட்டு, சமூகப் பணிகள் மற்றும் ஆராய்ச்சி துறைகளிலும் முன்னேற்றம் காண்கிறார்கள். அதனால் தான் சவீதா மாணவர்கள் எங்கு சென்றாலும், தங்கள் ஒழுக்கம், திறமை, மரியாதை, மற்றும் மனிதநேயத்தால் தனித்தன்மை பெறுகிறார்கள்

### சுற்றுச்சூழல் மற்றும் நிலைத்த முன்னேற்றம்

சவீதா பல்கலைக்கழகம் கல்வியுடன் சேர்த்து இயற்கை பாதுகாப்பிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. மழைநீர் சேகரிப்பு, மரக்கன்றுகள் நடுதல், பசுமை வளாகம் உருவாக்குதல், மின்சார சேமிப்பு திட்டங்கள் போன்ற பல முயற்சிகள் சவீதா வளாகத்தில் நடைமுறையில் உள்ளன. இவ்வாறு கல்வி, சுற்றுச்சூழல், மனிதம் இம்மூன்றையும் ஒன்றாக இணைக்கும் இடமே சவீதா.

### புதிய தலைமுறைக்கான ஒரு உறுதி

சவீதா பல்கலைக்கழகம் எதிர்கால தலைமுறைக்கு ஒரு உறுதியை அளிக்கிறது — “தமிழகத்தின் ஒவ்வொரு மாணவரும் உலகளாவிய அரங்கில் தன்னை வெளிப்படுத்தும் திறன் பெற வேண்டும்.” அதற்காக சவீதா, தன்னுடைய பாடத்திட்டங்கள், பயிற்சி முறை, மற்றும் வழிகாட்டல் அமைப்புகளை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது.

### மறையாத ஒளி

டாக்டர் என். எம். வீரையன் அவர்களின் வாழ்க்கை, ஒரு மனிதன் கனவு கண்டால் எத்தனை பேரின் வாழ்வையும் ஒளிரச் செய்யலாம் என்பதற்கான சிறந்த சான்று.

அவரின் உழைப்பும் தியாகமும் இன்று சவீதா பல்கலைக்கழகமாக வெளிப்பட்டிருக்கிறது. அந்த ஒளி இன்னும் பல தலைமுறைகளுக்குச் சுடராக இருக்கும். "வாழ்க்கையில் நிலைத்து நிற்கும் ஒரே சொத்து – நம் செயல். நம் செயல் நன்மையாக இருந்தால், காலம் அதை அழிக்க முடியாது." அந்தச் சொற்றொடரே டாக்டர் வீரையனின் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். அவர் உருவாக்கிய சவீதா பல்கலைக்கழகம் இன்று கல்வியிலும், மனிதநேயத்திலும், சமூக சேவையிலும் நிலைத்து நிற்கும் ஒரு மரபு – தமிழ்நாட்டின் மண்ணிலிருந்து முளைத்து, உலக அரங்கில் ஒளிரும் ஒரு மரபு.



### முடிவுரை

ஒரு சாதாரண மனிதர் கண்ட கனவு இன்று ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கையை மாற்றியுள்ளது. அந்தக் கனவை நிஜமாக்கியவர் – டாக்டர் **என். எம். வீரையன்**. அவருக்கு கல்வி என்பது ஒரு பணி, சேவை என்பது ஒரு பண்பாடு. அந்த பண்பாட்டை இன்று இந்தியாவின் பெருமையாகவும், தமிழ்நாட்டின் நம்பிக்கையாகவும் பெருமையுடன் தாங்கி நிற்கிறது சவீதா பல்கலைக்கழகம்.

"அறிவு,
அன்பு,
அர்ப்பணிப்பு
இவை
இணைந்தால்,
எந்த கனவும்
நனவாகும்."

– டாக்டர் என். எம். வீரையன்.






# 2024 – 25 ஆம் ஆண்டிற்க்கான
# பொதுக்குழு கூட்டம்
## வெள்ளி விழா இல்லத்தில்



அன்புடையீர் வணக்கம்;

நமது சங்கத்தின் 2024-2025 ஆம் ஆண்டிற்கான பொதுக்குழு கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை 28-09-25 அன்று வெள்ளி விழா இல்லத்தில் காலை 10:30 மணியளவில் நடைபெற்றது. சுமார் 60க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். சமீபத்தில் மறைந்த நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் டாக்டர் ஆர். வேலுசாமி அவர்கள் திருவுருவப்படத்திற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

### தலைவர் வரவேற்புடன்பொதுக்குழு கூட்டம் தொடங்கியது:

சங்கத்தின் நடப்பு செயல்முறைகளை பற்றியும் மற்றும் சங்கத்தின் 64ஆம் ஆண்டு குடும்ப விழா பற்றியும் பகிர்ந்து கொண்டார். சங்கத்தின் மாத இதழ் விளம்பர வேண்டுகோள் பற்றியும், அதனால் லாபம் வருவது பற்றியும் பகிர்ந்து கொண்டார். மேலும் சங்கத்தின் உறுப்பினர்கள் பல்வேறு சமுதாயப் பணிகளை முன்வந்து செயல்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

### செயலாளர் உரை:

சங்கத்தின் 2024-2025 ஆம் ஆண்டு அறிக்கையை படித்தார். மூன்று கட்டிடங்கள் செயல்பாடுகளைப் பற்றியும், அதில் உள்ள மேம்பாடுகள் வரவு செலவு பற்றியும் கூறினார். தீரன் சின்னமலை மாளிகை சிறப்பாக செயல்பட்டு வருவதைப் பற்றி தெரிவித்தும் அடுத்த இரண்டு மூன்று அறைகளை புதுப்பிக்கப்படுவதை பற்றி தெரிவித்தார்.
இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு நடந்த பொது குழுவில் தீரன் சின்னமலை மாளிகை மூலம் வருவாய் இழப்பு ஏற்படுகிறது என்று கூறி அந்தக் கட்டிடத்தை விற்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்று நமது நிர்வாகத்தால் மிகவும் சிறப்பாக செயல்படுகிறது





என்று தெரிவித்தார் விடுதியில் இருப்பவர்களுக்கு உணவு அளிக்கலாம் என்று ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.
குடும்ப விழாவில் விருதுகள் அளிக்கும் பெயர்கள் மற்றும் எண்ணிக்கை பற்றி ஆலோசிக்கப்பட வேண்டும் என்று கூறினார். சங்கத்தின் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதை பற்றியும் ஆலோசிக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

### பொருளாளர் உரை

சங்கத்தின் 2024-2025 ஆண்டின் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்தார்.
சங்கத்தின் 64 ஆம் ஆண்டு குடும்ப விழா, அதன் வரவு செலவுகளை பற்றியும் மூன்று கட்டிடங்கள் வரவு செலவு பற்றியும் தெரிவித்தார்.
உறுப்பினர்களால் சில கேள்விகள் எழுப்பப்பட்டு கேள்விகளுக்கு Internal Auditor அருண்குமார் அவர்கள் ஆலோசனையுடன் பதில்கள் அளிக்கப்பட்டது.

### உறுப்பினர்களின் ஆலோசனைகள்:

1. சங்கத்தின் முன்னாள் தலைவர் K.R.அப்பாவு அவர்கள் சென்னையில் உள்ள நபர்களை உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

2. துணைத் தலைவர் V.P வீரப்பன் அவர்கள் வெளியூர் நபர்கள் சேர்க்க வேண்டும் என்று தெரிவித்தார்.

3. சங்கத்தின் உறுப்பினர் கே சி பழனிசாமி அவர்கள் By Law விதிகளின்படி செயல்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

4. திரு.சக்திவேல் அவர்கள் குடும்ப விழாவில் நமது சமுதாயத்தை சார்ந்தவர்களை தொகுப்பாளர்களாக போட வேண்டும் என்று கூறினார்.

5. திரு.ராஜா அவர்கள் கடந்த ஆண்டுகளில் சங்கத்தின் வைப்புத் தொகையை எடுத்து செலவு செய்ததை அதற்கு ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

6. திரு துரைசாமி அவர்கள் சங்கத்தின் மாத இதழை mail / what's up மூலமாக அனுப்ப வேண்டும் என்று கூறினார்.

7. அதற்கு செயற்குழு உறுப்பினர் திரு அருள் பொன்னுசாமி அவர்கள் புத்தகமாக அனுப்ப வேண்டும் என்று தெரிவித்தார்.

8. திரு மகாதேவன் அவர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் விவரங்கள் அடங்கிய புத்தகம் வேண்டும் என்று தெரிவித்தார்.

9. திரு பாண்டியன் அவர்கள் கடந்த ஆண்டுகளில் சங்கத்திற்கு புதிய இடம் வாங்குவதற்கு பெறப்பட்ட வட்டியில்லா தொகைகள் திருப்பி செலுத்தப்பட்டதா என்று கேட்டார்.

10. திரு.துரைசாமி அவர்கள் சங்கத்துக்காக Podium என்கிற mic கருவி அன்பளிப்பாக தருகிறார் என்பதை தெரிவித்தார். அதற்கு சங்கத்தின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

### சங்கத்தின் 2024-2025 ஆம் ஆண்டுக்கான நடைபெற்ற பொது குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

1. சங்கத்தின் சார்பாக ஆண்டுதோறும் விருதுகள் வழங்கப்படும் எண்ணிக்கை அதிகபட்சமாக 12ஆக இருக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்



பின்வரும் பிரிவுகளில் விருதுகள் எண்ணிக்கையும்/பெயர்களில் வழங்கப்படும்.
i)கொங்கு மாமணி -2
ii) தொழிற்துறை-2
i)பெண் சாதனையாளர் -2
iii)வேளாண் சாதனையாளர் -1
iv) சமுதாய ஒருங்கிணைப்பு / சமூக சேவகர் -1
v) இளம் சாதனையாளர் -4
ஆகிய பெயர்களில் மட்டுமே விருதுகள் வழங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.



2. சங்கத்தின் வங்கியில் உள்ள வைப்புத் தொகையான Corpus Fund /Fixed deposit மற்றும் Educational Fund ஆகியவற்றை உபயோகிக்க EGM/AGM யில் அனுமதி பெற்று உபயோகிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

3. ஆண்டுதோறும் சங்கத்தின் சார்பாக வழங்கப்படும் கல்வி ஊக்கத்தொகை நிர்வகிக்க பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது.
i)V. K செல்வகுமார்
ii)V. P செங்கோட்டுவேல்
iii)C. கொங்குவேள்
மற்றும் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் இருப்பார்கள் என்று பொதுக்குழுவால் தீர்மானிக்கப்பட்டது



4. பொதுக்குழுவில் பெருவாரியான உறுப்பினர்கள் ஆலோசனைப்படி சென்னையில் வாழும் சொந்தங்களை மட்டுமே நமது சங்கத்தில் உறுப்பினராக சேர்க்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது

5. 2024-2025 ஆம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை பொது குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. முன்மொழிந்தவர் துணைத் தலைவர் R.சண்முகவேல்
வழிமொழிந்தவர் K.C. பழனிசாமி



6.சங்கத்தின் தற்போதைய தணிக்கையாளர்

திரு ஆர் பாலச்சந்திரன் அவர்கள் ராஜினாமா செய்து விட்டபடியால் பொதுக்குழுவின் ஒப்புதல் பெற்று

திரு.ரவிச்சந்திரன் அவர்கள் சங்கத்தின் புதிய தணிக்கையாளராக நியமிக்கப்பட்டார். அவருக்கு ஆண்டுதோறும் தணிக்கையாளர் கட்டணத் தொகையை ரூபாய் 10,000 வழங்கப்படும் என முடிவெடுக்கப்பட்டது.

முடிவுரை:

பின்னர் பொருளாளர் திரு C.கொங்குவேள் நன்றியுடன் பொதுக்குழு கூட்டம் நிறைவு பெற்றது. பொதுக்குழுவில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் விடுதியில் தங்கி உள்ள மாணவர் மாணவிகளுக்கு சைவ/அசைவ உணவு பரிமாறப்பட்டது.



# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் ஆயுத பூஜை விழா

வெள்ளி விழா இல்லம்



---



கொங்கு நாடு இல்லம்

---

தீரன் சின்னமலை மாளிகை






**Rooted in the legacy of Amma Nanna, I was inspired by the value of hardwork , trust and integrity . With a deep passion for jewelry, I founded Tiyaraa , a brand that blends timeless artistry with modern sophistication.**



# விழித்தெழு! முயன்றிடு!! வென்றிடு

## 02 உழைப்பை விதையுங்கள்...

வெற்றி என்பது நமது முயற்சிக்கு சூட்டப்படுகிற மணிமகுடமாகும். முயற்சி என்பது விதை போன்றது அதை வீசிக்கொண்டே இருப்பவர்கள் தொடர்ந்து நின்று கொண்டே இருக்கிறார்கள் . ஓய்வின்றி உழைப்பவர்கள் நிச்சயம் உன்னத நிலையை அடைந்தே தீர்வார்கள் என்பது உறுதி ஆகவே உழைப்பை விதைத்து கொண்டே இருங்கள் வெற்றியின் விடியல் தொடரும்.

காலத்தையும் அதிர்ஷ்டத்தையும் குறை கூறிக்கொண்டு வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு முழுமையாக உழைக்க தயங்குபவர்களுக்கு வெற்றியின் தரிசனம் ஒருபோதும் கிடைப்பதில்லை. வாழ்க்கை என்னும் பாதையில் மகிழ்ந்து பயணப்படுவதற்கும் வெற்றிக் கனிகளை சுவைப்பதற்கும் உழைப்பே உறுதுணை என்பதை உள்ளத்தில் உறுதியாக எழுதுங்கள். உழைப்பின் வேர்கள் கசப்பானவை என்றாலும் அதனால் கிடைக்கும் வெற்றியின் கனிகள் இனிப்பானவை.

திட்டமிட்டு உழைக்கும் போது திசைகள் தோறும் வெற்றி. ஆம், ஒவ்வொரு தினத்தையும் முந்தைய நாள் இரவே திட்டமிட்டு கொள்ள வேண்டும். அதாவது நேரத்திற்கு ஏற்ற வேலை; வேலைக்கேற்ற நேரம் என காலத்தை ஒதுக்கிக்கொண்டு செயல்பட வேண்டும் . செல்வத்தில் சிறந்த செல்வம் நேரம். மற்ற செல்வங்களை இழந்தால் திரும்பப் பெற முடியும், ஆனால் இழந்த நேரத்தை ஒருபோதும் திரும்ப பெற முடியாது இதைத்தான் எனது கவிதை ஒன்றில்

**நேற்று என்பது உடைந்த பானை**
**நாளை என்பது மதில் மேல் பூனை**
**இன்று மட்டுமே கையில் உள்ள வீணை**

என்று குறிப்பிட்டுள்ளேன். ஆம்! ஒவ்வொரு நாளையும் விதைப்பு நாளாகவே கொண்டாடி வியர்வையில் குளிக்க வேண்டும். அதாவது தினந்தினம் நற்செயல்களை விதைத்துக் கொண்டே இருங்கள். எதிர்காலத்தில் நாளும் நாளும் வெற்றியை அறுவடை செய்து கொண்டே இருக்கலாம்.

மேலும் வெற்றி பெறுவதற்கு தேவையான தகுதியை தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டும். ஆம்! தகுதி என்ற சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்தும் நமது தகுதியை நிர்ணயம் செய்கிறது. இச்சொல்லில் உள்ள "**த**" என்பது **தன்னம்பிக்கையையும்,** "**கு**" என்பது **குறிக்கோளையும்,** "**தி**" என்பது **திறமையையும்** குறிக்கும்.

ஆகவே தன்னம்பிக்கையுடன் குறிக்கோளை நோக்கி முயற்சிப்பதற்கு தேவையான திறமைகளை வளர்த்துக் கொண்டும் தகுதியுடன் உழைத்துக் கொண்டே இருந்தால் நிச்சயம் தொடர் வெற்றியை அடைந்து கொண்டே இருக்கலாம்.

லட்சிய சிகரத்தில் வெற்றிக்கொடி நாட்டுவதற்கு துணிச்சலுடன் தொடர்ந்து உழைத்துக் கொண்டு இருங்கள். வெற்றி நிச்சயம் உங்கள் பக்கம் நிற்கும்.

இதுவரையில் ஒருவர் வெற்றியடையவில்லை என்றால் வெற்றியடைவதற்கு அவர் தகுதியற்றவர் என்று அர்த்தம் அல்ல, அவருடைய முயற்சியும் உழைப்பும் போதவில்லை என்றுதான் அர்த்தம். தண்ணீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி சூடு செய்கிறீர்கள் அது கொதிக்கவில்லை என்றால் என்ன அர்த்தம் ! சூடு போதவில்லை என்று தானே அர்த்தம். நெருப்பின் ஆற்றலைக் கூட்டிச் சிறிது நேரம் காத்திருந்தால் அது கொதிக்க ஆரம்பித்து விடும் அல்லவா? அது போல தான் வெற்றியும்.

அதுபோல தான் உரிய சூழ்நிலை உணர்ந்து உங்களுடைய உழைப்பை உயர்த்தினால் உறுதியாக உங்களால் வெல்ல முடியும் தோல்வியை கண்டு மனம் தளராமல் உழைப்பை விதைத்துக் கொண்டே இருங்கள். விரைவில் வெற்றியின் அறுவடையை நிகழ்த்தலாம்...

*"வெற்றி என்பது ஒரு விபத்தல்ல*

*அது*

*வியர்வைத் துளிகளின் விளைச்சல். "*

– மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.



ஈரோடு, சித்தோடு ஆவின் வளாகத்தில், வரும் நவம்பர் 26 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் திறக்கப்படவிருக்கும், கூட்டுறவு பால்வளத் தந்தை திரு.எஸ் கே பரமசிவம் அவர்களின் திரு உருவ சிலை நிறுவும் பணியை ஆய்வு மேற்கொண்டிருக்கும் மாண்புமிகு அமைச்சர் திரு. சு.முத்துசாமி அவர்கள்!




KRISHYA

*Kurti Manufacturers*

- Casual Kurtis
- Co-ord Sets
- Salwar Sets
- Maternity Wear

We are exclusively available at
reputed retail stores across Tamilnadu.

**• WE CATER TO WHOLESALE ORDERS ONLY •**

R.K FABS, No. 76, Sankari Bye-pass road,
near Ottanmethai, Agraharam(PO),
Pallipalayam, Erode - 638008.

**+91 9789973128**

rkfabsppm@gmail.com








துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு C.P.ராதாகிருஷ்ணன் அவர்களை 11.10.2025 அன்று டெல்லியில் துணை ஜனாதிபதி இல்லத்தில் சந்தித்து திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ER. ஈஸ்வரன் அவர்களும் மற்றும் நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் V. S. மாதேஸ்வரன் அவர்களும் வாழ்த்து தெரிவித்த போது.!

# போரூர் சங்க நிகழ்வு






நமது போரூர் மகளிர் குழு சார்பாக பரணிபுதூர் இல் அமைந்துள்ள லிட்டில் ட்ராப் முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற மகளிர் சுமார் 100பேருக்குஇலவசமாக நைட்டி வழங்கப்பட்டன.

# வாழி நலம் சூழ !

– கலாப்ரியன் ( பூபதி )



தலை மகன் என
அண்ணனையும்
கடைக்குட்டி என
தம்பியையும்
பெண்களென
சகோதரிகளையும்
அரவணைத்த அன்னை
தந்தையின் கொடும்பாவி
என பாவித்து
எனை அடித்து
வதைத்ததை பயணத்தில்
வயல்களில் நிற்கும்
திருஷ்டி பொம்மைகள்
நினைவூட்டுகின்றன!

வாழி நலம் சூழ!
வைகறை வணக்கங்கள்

# டாக்டர் கே. குழந்தைவேல் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவு விழா




1926 ஆம் ஆண்டு கோவையில் உள்ள அப்பாச்சி கவுண்டன் பதி கிராமத்தில் ஓர் எளிய விவசாய குடும்பத்தில் பிறந்த டாக்டர் கே. குழந்தைவேல் அண்ணா அவர்கள் ஆரம்பக்கல்வியை உள்ளூர் திண்ணைப்பள்ளியில் ஆரம்பித்து, சித்தூர் உயர்நிலைப்பள்ளி, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி, சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் பி. ஏ.ஆனர்ஸ் சேவா கிராம் காந்தி ஆசிரமத்தில் ஆதாரக் கல்வி ஆசிரியர் பயிற்சி, ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யாலயா ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பி.டி பட்டப்படிப்பு, அமெரிக்கா ஓஹியோ பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையில் எம். ஏ பட்டம், சென்னை பல்கலைக்கழகத்தில் கல்வியலில் டாக்டர் பட்டம் முதலிய பட்டங்களை பெற்ற கல்வியாளர். ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யாலயா காந்தி ஆதாரப் பயிற்சி பள்ளியில் ஆசிரியராக, தலைமை ஆசிரியராக, வித்யாலயா ஆசிரியர் பயிற்சி கல்லூரி – கல்வி அறிவியல் கல்லூரிகளில் முதல்வராக பாரதியார் பல்கலைக்கழகத்தின் கல்லூரி அபிவிருத்தி கவுன்சிலிங் டீன், ஆக, ஆசிரியர்கள் பயிற்சி கல்லூரி இயக்குனராக பணிபுரிந்து சிறப்பு பெற்றவர்.

கோவை அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் செயலாளர், பதிவாளர், வேந்தர் போன்ற பொறுப்புகளையும் ஏற்று திறம்பட செயல்பட்டவர். திரு அவிநாசிலிங்கம் ஐயாவின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரம் ஆகி இராமகிருஷ்ணா வித்யாலயா நிர்வாக குழுவின் தலைவராகவும் பணியாற்றியவர். பத்மபூஷன் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று **குமரகுரு பொறியியல் கல்லூரியின் ஆலோசகராக 9** ஆண்டுகளுக்கும் மேலாக பணி புரிந்தவர் தற்போது அவிநாசிலிங்கம் **அறக்கட்டளையின் மூத்த ஆயுட்கால அறங்காவலராக சேவை செய்து வருபவர்.**

புன்முறுவல், எளிமை, தோழமைப் பேச்சு, பிறர்க்கு உதவும் பெருங்குணம், கல்வி வளர்ச்சியில் அளவிலா ஆர்வம், காந்திய நெறியை பின்பற்றுதல் அறம் அனுமதித்த வார்த்தைகள் மட்டுமே நினைப்பது, பேசுவது, பெரியோரை மதிப்பது, கதர் ஆடை அணிவது காந்திய சிந்தனையாளர் பொன்னையும், பொருளையும் பெரிதாக கருதாத நற்குணங்களுக்கு சொந்தக்காரர்.

இத்தகைய மாமனிதர் குழந்தைவேல் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை சாந்தி ஆசிரமம், பேரூர் ஆதீனம், கௌமார மடம்,

இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா, அவிநாசிலிங்கம் பல்கலைக்கழகம், பாரதி வித்யா பவன், மகாத்மா காந்தி அருங்காட்சியகம், சக்தி நிறுவனங்கள், குமரகுரு கல்வி நிறுவனம், நன்னெறி கழகம், பேரூர் அறக்கட்டளை கழகம் மற்றும் வடக்கு சர்வோதயா சங்கம் போன்ற அமைப்புகள் சார்பில் 06.09.2025 சனிக்கிழமை அன்று காலை 11 மணியளவில் கோவை புதூர் சாந்தி ஆசிரமத்தில் உள்ள டாக்டர் அறம் அரங்கத்தில் விமரிசையாக நடத்தின.

விழாவில் பேரூர் பட்டீஸ்வரர் திருக்கோயில் சிவஜால சுந்தரம் குருக்கள் பூர்ண கும்ப மரியாதையுடன் குழந்தைவேல் அண்ணா அழைத்து வரப்பட்டு சர்வ சமய பிரார்த்தனை பாடல்களுடன் தொடங்கிய விழாவில் சிரவை ஆதீனம் குமர குருபர சுவாமிகள் இராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா சுவாமி சகனாந்தாஜி மகராஜ், கோவை பாரதிய வித்யா பவன் கௌரவ தலைவர் டாக்டர் பி கே கிருஷ்ணராஜ் வானவராயர், சக்தி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம், நிர்வாக இயக்குனர் திரு ம. பாலசுப்ரமணியம், சாந்தி ஆசிரம அறங்காவலர் திரு ஏ எம் அழகிரிசாமி, திரு வி பி தண்டாயுதம் குழந்தைகளுக்கான மசாஜ் மருத்துவ மையம் மருத்துவர் எம் ராமசாமி, குழந்தைவேல் அண்ணாவின் பேரன் டாக்டர் என் ஜெயம் காந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கோவை பாரதிய வித்யா பவன் கௌரவ தலைவர் டாக்டர் பி கே கிருஷ்ணராஜ் வானவராயர் அவர்கள் வாழ்த்துரையில் பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை அது ஆண்டவன் கொடுத்தது. ஆனால், அந்த இடைப்பட்ட காலத்தில் நாம் விரும்பியபடி வாழலாம் நாமும் வாழத்தான் விரும்புகிறோம் திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியில் படித்த போது மகாத்மாவை தூரத்தில் இருந்து பார்த்த குழந்தைவேல் அண்ணா அந்த ஒரு நிமிட நினைவு இன்னும் என் மனதை விட்டு அகலவில்லை என்கிறார் அதேபோல சாந்தி ஆசிரம நிர்வாகி ஒருவர் பள்ளி மாணவனாக இருந்தபோது சென்னையில் மகாத்மா காந்தி காரில் சென்ற பார்த்த காட்சி இன்னும் என் கண்ணை விட்டு நீங்கவில்லை என்கிறான் இத்தகையவர்களோடு பழகுவதற்கு நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும் எங்களை எல்லாம் நீங்கள் ஆசிர்வதிக்க வேண்டும் அரிதான இந்த மனித வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக்கொள்ள விரும்புகிறோம்.

1934 இல் கோவை போத்தனூரில் மகாத்மா காந்தி வாழ்ந்த இல்லத்தை பழமை மாறாமல் மகாத்மா காந்தி அருங்காட்சியகம் அவர் நினைவாக ஜி டி நாயுடு குடும்பத்தினர் உருவாக்கி இருக்கிறார்கள். இதை அனைவரும் சென்று பார்க்க வேண்டும். மிகப்பெரிய தொழிலதிபர் ஒருவர் காந்தி தங்கி இருந்த அறையில் அமர்ந்து தியானம் செய்த போது என்னுள் இருக்கும் மகாத்மாவைக் கண்டு கொண்டேன் என்று எனக்கு கடிதம் எழுதினார். ஆகவே மகாத்மா எங்கேயும் போகவில்லை. அவர் நம்முடன் தான் இருக்கிறார்.

குழந்தைவேல் அண்ணாவைப் போல நீங்களும் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வர விரும்பினால் தினந்தோறும் உங்கள் காலை பிராத்தனையின் போது கண்ணை மூடி மகாத்மாவை மனதில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள். பாரதீய வித்யா பவனின் மகாத்மாவின் 150 ஆவது ஆண்டை கொண்டாடிய விழாவிற்கு தென்னாப்பிரிக்காவில் இருந்து அவரது பெயர்த்தி இலா காந்தி அழைக்கப்பட்டிருந்தார். அந்நிகழ்வில் 30 தியாகிகளுக்கு அவர் பொன்னாடை அணிவித்தார்கள். அவர்கள் அனைவரும் இலா காந்தியின் பாதத்தை தொட்டு வணங்கிய போது, இலா காந்தியும் அத்திகிகளின் பாதத்தை தொட்டு வணங்கி, "இந்த தியாகிகள் இல்லாமலா மகாத்மா காந்தி வந்துவிட்டார்?" என்றார். மகாத்மா காந்தியை பற்றி பேசினாலும் குழந்தைவேல் அண்ணாவைப் பற்றி பேசினாலும் இரண்டும் ஒன்றே!

"இன்று நூற்றாண்டு நிறைவை கொண்டாடும் மரியாதைக்குரிய அண்ணா அவர்களே! உங்களுக்கு நாங்கள் உறுதி தருகின்றோம். உங்களுக்கு நீங்கள் எல்லோரும் அரும்பாடு பட்டு சுதந்திரத்திற்கு ஒரு அர்த்தத்தை தந்து, நீங்கள் விரும்பிய இந்தியாவை உங்கள் காலத்தில் நீங்கள் பார்க்கும்படி உருவாக்கி காட்டுவோம். இது உங்கள் மூலமாக மகாத்மா காந்திக்கு நாங்கள் தரும் உறுதிமொழி! ஜெய்ஹிந்த்! வந்தே மாதரம்!" என்று வாழ்த்துரையின் இடையே அனைவரையும்

உறுதிமொழி ஏற்க செய்து தனது உரையை நிறைவு செய்தார்.



சக்தி நிறுவனங்களின் தலைவர் டாக்டர் ம.மாணிக்கம் அவர்கள் வாழ்த்துரையில், "குழந்தைவேல் அண்ணா அவர்கள் அதிகமாக பேச மாட்டார். எல்லா சூழ்நிலையிலும் அமைதியாகவே திகழ்வார். அவர் அமைதியாக இருப்பதை பார்த்து நான் பலமுறை வியந்திருக்கிறேன். எத்தகைய சூழ்நிலையிலும் எந்த ஒரு பிரச்சனையாக இருந்தாலும் அதனை அமைதியாக தீர்வு காண்பார். அவரோடு பல ஆண்டுகள் நெருங்கி பழகி இருக்கிறேன். 'நிறைகுடம் தளும்பாது' என்ற சொற்றொடருக்கு சொந்தக்காரர்! எங்கள் குடும்பத்தின் சார்பிலும், சக்தி நிறுவனங்களின் சார்பிலும் மரியாதைக்குரிய குழந்தைவேல் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவு விழாவில் பங்கு பெற்று வாழ்த்தியதற்காக மட்டற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன்" என்றார்.

சக்தி நிறுவனங்களின் நிர்வாக இயக்குனர் திரு. ம. பாலசுப்பிரமணியம் அவர்கள் வாழ்த்துரையில், "எனது தந்தை அருட்செல்வர் ஐயா அவர்கள் தான் முதன்முதலில் என்னை குழந்தைவேல் அண்ணா அவர்களுக்கு குமரகுரு கல்லூரியில் வைத்து அறிமுகம் செய்து வைத்தார். அன்றிலிருந்து அண்ணா அவர்களுடன் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகளைப் பெற்று வருகிறேன். அவர் கோபப்பட்டு நான் பார்த்ததே இல்லை. கல்லூரியில் பேராசிரியர்களிடமும் மாணவர்களிடமும் எப்போதும் அன்பு பாராட்டி அனைவரையும் ஒருங்கிணைத்து செல்வார். அவர் மேலும் பல்லாண்டு நலமுடன் வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறேன்" என்றார்.

டாக்டர் குழந்தைவேல் அண்ணாவின் ஏற்புரையில், "சிறிய கிராமத்தில் பிறந்து வளர்ந்த எனக்கு இத்தனை அமைப்புகளும் ஒன்று சேர்ந்து நூற்றாண்டு நிறைவு விழா கொண்டாடியதை நினைக்கும் போது மனம் உருகுகின்றது. என் மீது இவ்வளவு பிரியம் வைத்திருக்கிறீர்களே, அதற்கு நான் தகுதியா என்ற ஓர் எண்ணம் கூட எனக்குள் எழுகிறது. முதலில் விழாவினை ஏற்பாடு செய்த அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சித்தூர் உயர்நிலைப் பள்ளியில் படித்தபோது சீனியர் மாணவர்,'காந்தி நாட்டு சுதந்திரத்திற்காக பாராட்டப்படுகிறார். நீங்கள் அனைவரும் அதற்காக உழைக்க முன்வர வேண்டும் எனக் கூறி, கதர் ஆடையை அணிய'அறிவுறுத்தினார். 1939 இல் இருந்து இன்று வரை கதர் ஆடையை அணிந்து வருகிறேன். அப்போதிருந்து என் மனதில் காந்தி நன்றாக பதிந்து விட்டார். அதனால் காந்தியை படிக்க முயற்சித்தேன். திருப்பராய்த்துறை சுவாமி சித் பவானந்தரின் சொற்பொழிவுகளை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து கேட்டதன் பயனாக, சுவாமிஜியுடன் அறிமுகம் கிடைத்தது. அதன் பிறகு அமெரிக்க சுவாமி சச்சிதானந்தாவின் அறிமுகம் கிடைத்தது. காந்தியின் 'ஹரிஜன்' பத்திரிக்கையை தொடர்ந்து வாசித்தேன். சென்னையில் எம். ஏ முடித்தவுடன், என்னுடன் படித்தவர்கள் ஐஏஎஸ், ஐபிஎஸ்தேர்வுக்குத்தயாராகிகொண்டிருந்தார்கள். அவர்கள் என்னையும் தேர்வுஎழுத வற்புறுத்தியபோது, 'காந்திய வழியில் கிராம சேவை செய்யவே விரும்புகிறேன்' எனக்கூறி மறுத்து விட்டேன்.

கோவை பெரியநாயகன்பாளையத்தில் அவிநாசிலிங்கம் ஐயா தலைமையில் நடைபெற்ற அகில இந்திய ஆதாரக் கல்வி மாநாட்டில் விநோபாஜி, டாக்டர் ஜாகிர் உசேன், ஆச்சார்ய கிருபளானி கலந்து கொண்டனர். அம்மா நாட்டின் சொற்பொழிவுகளை கேட்ட பிறகு, ஆதாரக் கல்வியை தான் கற்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். திரு அரியநாயகம் அவர்கள் தான் சேவா கிராமத்தில் ஆதார கல்வி கற்பதற்கு வாய்ப்பளித்தார். அப்போது விநோபாஜி எங்களுக்கு வகுப்பு நடத்தினார்.

விநோபாஜிக்கு கம்பராமாயணம் படிக்க வேண்டும் என்ற நீண்ட நாளைய ஆசை. திரு அரியநாயகம் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க,'விநோபாஜிக்கு தினசரி 3 மணி நேரம் கம்பராமாயணம் சொல்லிக் கொடுக்கும் பாக்கியம்' பெற்றேன்.

நண்பர் டாக்டர் அறம் அவிநாசிலிங்கம் அய்யாவிடம் என்னை அறிமுகம் செய்ததன் விளைவாக, ராமகிருஷ்ணா வித்யாலயத்தில் சேர்ந்தேன். அப்போது எனக்கு சம்பளம் ரூபாய் 124. அதனைத் தொடர்ந்து கல்வித்துறையில் பல உயர் பொறுப்புகளை வழங்கி அழகு பார்த்தார். இப்போது எனது கிராமத்தில் அமைதியாக வசித்து வருகிறேன். தினமும் காலையில் 3.30 மணிக்கு எழுந்தவுடன் ஒரு டீஸ்பூன் கடுக்காய் பொடியை வெந்நீரில் கலந்து குடித்து விடுவேன். அதன் பிறகு மூச்சுப் பயிற்சி, எளிய ஆசனங்கள், தியானம், எப்போதும் இறை சிந்தனையில் இருக்கிறேன். எளிய சைவ உணவை உட்கொள்கிறேன். மது, மாமிசம், பீடி, சிகரெட் போன்ற பழக்கத்திற்கு இடம் தந்ததில்லை. ஆத்திரம், கோபத்திற்கு இடமளித்ததில்லை. அதனால் நோய் இல்லாமல் ஆரோக்கியமாக இருக்கிறேன். இதுதான் என் ஆரோக்கிய வாழ்க்கையில் ரகசியம். அனைத்து அமைப்புகளுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி"உரையை நிறைவு செய்தார். விழாவின் ஒரு நிகழ்வாக, வரவேற்ற டாக்டர் அறம் அவர்கள் நூற்றாண்டு விழாவின்போது, சேவை மனப்பான்மையுள்ள 100 குழந்தைகளை தமிழ் மற்றும் ஆங்கில பேச்சு பொதுமேடைக்கு உருவாக்க திட்டமிட்டுள்ளோம். அதன் தொடக்க நிகழ்வாக குழந்தைகள் அண்ணாவின் நூற்றாண்டு நிறைவு தினத்தில், சாந்தி ஆசிரமத்தை சேர்ந்த செல்வன். சாய் நித்தின் பேசிய ஆங்கில மேடைப்பேச்சு அனைவரின் பாராட்டு பெற்றது.

சாந்தி ஆசிரமத் தலைவர் டாக்டர் வினுஅறம் அவர்கள் அனைத்து அமைப்புகளையும் ஒருங்கிணைத்து, இவ்விழா சிறக்க விரிவான ஏற்பாடுகளை செய்திருந்தார். விழா தேசிய கீதத்துடன் நிறைவு பெற்றது. மதிய விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

(நன்றி: சக்தி சர்க்கரை ஆலை, செய்திமடல்)







சவீதா மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை (SIMATS) அக்டோபர் 16, 2025 அன்று உலக முதியோர் தினத்தைக் கொண்டாடியது. முதியோர் வெளிநோயாளர் பிரிவு திறப்பு விழா, முதியோருக்கான பல் சுகாதாரம் குறித்த புத்தக வெளியீடு மற்றும் பத்மஸ்ரீ டாக்டர் வி.எஸ். நடராஜனின் சிறப்பு சொற்பொழிவு உள்ளிட்ட "கிராண்ட் டிரிபிள் ஃபீஸ்டா" நிகழ்வு இதில் அடங்கும். முதியோர்களின் ஆரோக்கியமான முதுமை, கண்ணியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதில் கவனம் செலுத்திய இந்த கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக 100க்கும் மேற்பட்ட முதியோர் நோயாளிகள் இலவச சுகாதார பரிசோதனைகளைப் பெற்றனர்.



08.11.2025 சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் திமுக 75 அறிவுத் திருவிழா நிகழ்ச்சியில் காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினரும், சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவருமான திரு ஈ.ஆர் ஈஸ்வரன் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த போது.

உ



## குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் 46ஆவது குருமகா சந்நிதானம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் மணிவிழா நிறைவுப் போதில் இராமலிங்கர் பணி மன்றம் அளித்த வணக்கத் திருமடல்!



அய்யனே அருள் குன்றக் குடியாளும் சண்முகத்
தெய்வத்தின் முதல் திருத்தொண்டரே எங்கள்
மெய்யனே வாழ்க! வாழ்க!

தமிழ்மா முனிஅரு ணாசல தேசிகர் தரும்
அமிழ்தமே ஞான சற்குரு நாதராம் எங்கள்
நிதியமே வாழ்க! வாழ்க!

மல்லிகை மணக்கின்ற மதுரைமா நகரிலே
மாதரசி மீனாட்சி மண்ணிலே விளைந்திட்ட
மாணிக்கம் வாழ்க! வாழ்க!

அருள்நெறி வளர்ப்பிலே ஞானம் தழைத்தாலும்
அறிவியல் கற்றதால் விஞ்ஞானம் வளர்க்கின்ற
ஆன்மீகம் வாழ்க! வாழ்க!

குமரன்கை வேல்போலத் சிந்தனைக் கூர்மையும்
வள்ளியின் விழிபோலத் தண்மையும் பொலிகின்ற
வண்தமிழ் வாழ்க! வாழ்க!

ஆரமுதத் தமிழிலே அருச்சனை குடமுழுக்கு
அனைத்தையும் நிகழ்த்த அடியெடுத் தளித்திட்ட
அருளாளா வாழ்க! வாழ்க!

வையத்தில் அறம்பொருள் இன்பம் தழைத்திட
அய்யன்திரு வள்ளுவன் குறளுக்கோர் பேரவை
அமைத்தனை வாழ்க! வாழ்க!

மதசாதி மோதல்களில் மனிதம் குலைகையில்
மருந்து கொண்டு ஓடியருள்
மனிதமே வாழ்க! வாழ்க!

இயற்கையின் பெருஞ் சீற்ற ஆழிப்பே ரலைகளில்
இடர்கொண்ட மானுடர் துயர்தீர உதவிய
இரக்கமே வாழ்க! வாழ்க!

வெறுப்பு நெருப்பெரிய வெடிகுண்டு இடிமுழங்க
மனிதநேயத் திருவிளக்கேற்ற வருகின்ற
கருணையே வாழ்க! வாழ்க!

குடந்தையில் பள்ளியில் தீப்பிடித்தே குலக்
கொழுந்துகள் கரிந்திட ஓடோடி உதவிய
தாய்மையே வாழ்க! வாழ்க!

அருள் வாழச் செந்தமிழ்ப் பொருள் வாழ நாட்டிலே
அறம் வாழ அன்புவாழ எங்கள்
அண்ணலே வாழ்க! வாழ்க!

அணிவிழா அன்பர்க்குப் பல கண்டு போற்றுவீர்
மணிவிழா நாயக, வண்தமிழ்ச் செம்மலே
யாம் வாழ வாழ்க! வாழ்க!

மண்ணுக்கும் விண்ணுக்கும் பாலமா, ஆன்மீகம்?
மனிதர்க்கும் மனிதர்க்கும் பாலமே என்றருள்
மாதவம் வாழ்க! வாழ்க!

வணக்கங்களுடன்
(ம.மாணிக்கம்)
தலைவர், இராமலிங்கர் பணிமன்றம்.

சென்னை
4.10.2025






12.10.2025 அன்று முத்தூர் முத்தன் குழு ஒருங்கிணைப்பு குழு அறக்கட்டளை அலுவலகம் அருளாசி கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாச்சல அடிகளார் முன்னிலையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த சிறப்பு நிகழ்வில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு.எஸ் காந்தி செல்வன், நமது சங்கத்தின் துணைத் தலைவர் திரு வி பி வீரப்பன், திருப்பூர் சுப்பிரமணியன் V. சக்திவேல் பெருந்துறை, KM வெங்கடேஸ்வர் கோபி, அருவி மணி மூணலூர், R.S ஈஸ்வரமூர்த்தி திருப்பூர் சே. செல்லமுத்து, கள்ளிமந்தயம் மற்றும் நமது கொங்கு சொந்தங்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# சென்னை மெட்டெக்ஸ் லேப் பி.லிட்
# CHENNAI METTEX LAB PRIVATE LIMITED®

*Where Test Inspires Trust...*

**Registered Office : Jothi Complex, No.83, MKN Road, Guindy, Chennai - 600 032, Tamilnadu, India**

**Contact : 86869 74749 | 044 - 2232 3163 / 4217 9490**

**ISO 17025:2017 NABL ACCREDITED** | **TESTING LABORATORY** | **WATER, FOOD PRODUCT AND ENVIRONMENTAL**



Stability Chamber



Water Activity Meter

Accreditations / Approvals : ISO 17025 : 2017 NABL TC - 5589

Stability is the Capability Of a specific formulation in a particular container closure system to remain within its physical chemical, microbiological, toxicological,the rapeutic specifications at a defined storage condition stability is expressed in terms of shelf Life.

| S.No | Study | Storage condition | Minimum time |
|---|---|---|---|
| 1 | Accelerated | 40º C ± 2º C | 75 % RH ± 5% RH 6 months |
| 2 | Long Term | 30º C ± 2º C | 60 % RH ± 5% RH12 months |

- Physio-Chemical Testing
- Microbiological Testing
- Heavy Metals
- Toxin Analysis



www.mettexlab.com

**Sample Collection Centre :-**

**ERODE : 89398 72544 | 72990 59215 | COIMBATORE : 98410 53041 | PUDUCHERRY : 95512 50027**
**MUMBAI : 89398 72540 | BANGALORE : 89399 90282 | COONOOR : 89399 98324**


கொங்கு மணமகன் மணமகள்
அறிமுக விழா
கொங்கு சமுதாயம், ஆல்போல் தழைத்து, அருகு போல் வேருன்றி,
மூங்கில் போல் சுற்றம் சூழ்ந்து, வாழையடி வாழையென, பதினாறும் பெற்று,
பெருவாழ்வு வாழ்க, என்று வாழ்த்திட
தங்களை அன்புடன் வரவேற்கிறோம்




கொங்கு மணமகன்
அறிமுக வி
அன்புடன் வ


ங்கு மணமகன் மணமகள்
அறிமுக விழா
ன்புடன் வரவேற்


மணமகன் மண
றிமுக விழா

## மணமகள் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம் நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 136 | K.Ashok Kumar | பனங்காடை | 25.6.1995 கார்த்திகை | M.E. | Senior Technical (Medical Device) | Salem 9.07AM | 99523 02325 |
| 162 | R.Pranesh | காடை | 11.2.1987 மகம் | MBA | Garments (Guindy) Chennai | அரூர் 3.15 AM | 96001 06108 |
| 163 | K.S.தரணிதரன் | கணவாளன் | 13.4.1999 பூரட்டாதி | B.Tech MBA (IIM) | Assistant Manager (Sobha-Dubai) | திருச்சிராப்பள்ளி 1.20 PM | 78981 89715 98651 79775 |
| 164 | Sabareesan | கண்ணன் | 17.10.1999 உத்திராடம் | MBA (IIMB) | Intership | Salem 9.47 PM | 86959 64815 99765 98211 |
| | | | | | | | |
| 165 | A. தீபக் | தூரன் | 12.07.1995 பூராடம் | B.E. Mech | Supply Chain Analyst | Salem 4.43 PM | 94444 18498 76674 76236 |
| | | | | | | | |
| 166 | J.P. நவீன் ராஜா | ஆந்தை | 29.11.1997 அனுசம் | B.E ( ECE ) | IT - Chennai | Ottachatram 9.58 PM | 94443 68758 98842 68368 |
| | | | | | | | |
| 167 | K. விவேக் | தூரன் | 10.04.1989 ரோகினி | M.Sc ( C.S ) | Germany ( Company) | Neyveli 6.30 Am | 96262 35773 94895 55247 |
| | | | | | | | |
| 168 | M.Karthikeyan | சாத்தந்தை | 04.09.1999 மிருகசிரிடம் | B.Sc (Phy), MBA | Software | Chennai 4.44 AM | 89393 88320 |
| | | | | | | | |

## மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 147 | R.ரம்யா | விழியன் | 11.2.1993 சித்திரை | B.E. (EEE) | IT Software | Erode 7.09PM | 99520 9234 98650 92150 |
| 154 | K.சங்கவி | பனங்காடை | 9.6.1999 ரேவதி | M.Sc., B.Ed., | Teacher (Chennai) | Salem 11.04 AM | 99523 02325 |
| | | | | | | | |



# மணமகன் தேவை

| எண் | பெயர் | கூட்டம் | பிறந்த தேதி, நட்சத்திரம் | கல்வி | தொழில் | பிறந்த இடம், நேரம் | தொடர்பு |
|---|---|---|---|---|---|---|---|
| 147 | R.ரம்யா | விழியன் | 11.2.1993 சித்திரை | B.E. (EEE) | IT Software | Erode 7.09PM | 99520 9234 98650 92150 |
| 154 | K.சங்கவி | பனங்காடை | 9.6.1999 ரேவதி | M.Sc., B.Ed., | Teacher (Chennai) | Salem 11.04 AM | 99523 02325 |
| | | | | | | | |
| 184 | R. Srinithi | கீரன் | 03.07.1999 சதயம் | B.Design (WIFT) | NYICAA ( Mumbai ) | Kovai 3.59 PM | 99449 94455 99449 94466 |
| | | | | | | | |
| 185 | Dr.S. பூஜா | பயிரன் | 06.09.2000 கேட்டை | MBBS | MD-PGIMER ( Doctor ) | Karur 4.30 PM | 98407 21210 96770 27216 |
| | | | | | | | |
| 186 | P. Diviya Durga | விழியன் | 11.09.1994 அனுஷம் | B.Arch | Architect Cam ( Assistant Manager ) | Chennai 7.20 AM | 89399 51166 |
| | | | | | | | |
| 187 | Dr.PS. மிருணாளினி | சாத்தந்தை | 11.09.1996 மகம் | MBBS MS (Neuro Surgery) | Studying PG | Salem 4.28 PM | 94436 56044 98434 56218 |
| | | | | | | | |
| 188 | A. Kiruba | விளையன் | 05.12.1998 மிருகசிரிஷம் | BDS | Consultant Product Manager | Salem 5.30 AM | 95006 50827 99545 0827 |
| 189 | B.Sarmitha | ஆந்தை | 19.05.2001 உத்திரட்டாதி | BBA,LLB | Advocate | Kovai 4.45 AM | 94444 04593 |
| | | | | | | | |
| | | | | | | | |

